தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

—————

செவ்வாய்க்கிழமை, 1979 பிப்ரவரி 20.

—————

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள் — விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

தென்னாற்காடு மாவட்டத்தில் புதிய காவல் நிலையங்கள்.

* வினா எண். 120. அ—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தென்னாற்காடு மாவட்டம் செஞ்சி வட்டம் வல்லத்தில் ஒரு வெளிப்புற (out–post) காவல் நிலையமும், சத்திய மங்கலத்தில் உள்ள வெளிப்புற (out–post) காவல் நிலையத்தை காவல் நிலையமாகவும் மாற்றும் செயற்குறிப்புகள் அரசிடம் உள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

முத்துராமலிங்கத்தேவர் நினைவுத் தபால் தலை

* வினா எண். 120 ஆ—திரு. டி. பி. எம். பெரியசாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களுக்கு நினைவும் தபால் தலை வெளியிட மத்திய அரசுக்கு இந்த அரசு பரிந்துரை செய்யுமா ?

[1979 பிப்ரவரி 20

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் நினைவுத் தபால் தலையை 30-10-78-ல் வெளியிட இவ்வரசு மத்திய அரசிற்கு பரிந்துரை செய்தது. இதனை அஞ்சல் தலை ஆலோசனைக்குழு 14-4-78-ல் நடந்த அதன் கூட்டத்தில் பரிசீலித்தது என்றும் தபால் தலைகள் தலைவர்களின் நூறாவது பிறந்த நாள், நூறாவது நினைவு நாள், நூற்று அய்ம்பதாவது பிறந்த நாள், அல்லது முதலாவது, பத்தாவது மற்றும் அய்ம்பதாவது நினைவு நாட்களில் வெளியிடுவது வழக்கம் என்றும் இதனால் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் நினைவு தபால்தலையை இப்பொழுது வெளியிட இயலவில்லை என்று மத்திய அரசு இவ்வரசிற்கு அறிவித்துள்ளது.

திரு. என். கிட்டப்பா: அவ்வாறு அறிவித்துள்ள மத்திய அரசை மீண்டும் தமிழக அரசு வலியுறுத்த ஆவன செய்ய முன் வருமா? அதைப் போலவே பசும்பொன் முத்துராமலிங்கத் தேவருக்கு இதுவரை நினைவாலயம் எழுப்பப்பட்டதாகத் தெரியவில்லை, அத்தகைய பெரியவருக்கு நினைவாலயம் உருவாக்க புதிய அரசு ஏற்பாடு செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு முதல்வர் அவர்கள் 8—3—78 அன்றே மத்திய அரசுக்கு இது குறித்து விரிவாக விளக்கி கடிதம் எழுதியுள்ளார்கள். இருப்பினும் அவர்கள் 14—4—78 அன்று நடந்த கூட்டத்தில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் நூறாவது பிறந்த நாள் விழாவோ அல்லது நூறாவது நினைவு நாள் விழாவோ அல்லது மற்ற குறிப்பிட்ட ஆண்டுகளில் வருகிற நினைவு நாட்களோ இப்போது சமீபத்தில் வரவில்லையாதலால் இப்போது ஒன்றும் செய்வதற்கில்லை என்று முடிவு செய்து பதில் அனுப்பியிருக்கிறார்கள். அவர்கள் சொல்லுகிற கணக்குப்படி 30-10-2008-ல் தான் அவருக்கு நாம் ஸ்டாம்ப் வெளியிட வேண்டிய சூழ்நிலை வருகிறது. ஆகையால் இது குறித்து மீண்டும் மத்திய அரசுக்கு எழுதப்படும். அவருடைய நினைவாலயம் அவருடைய பிறந்த இடத்தில் இருப்பதாக எனக்கு நினைவு.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: மீண்டும் இந்த அரசு முத்துராமலிங்கத் தேவர் தபால் தலையை மத்திய அரசு வெளியிட வேண்டுமென்பதற்காக முயற்சி எடுத்திருப்பதாக அறிவித்ததற்கு நன்றி. தமிழக வரலாற்றோடு இணைந்த மதிப்பிற்குரிய ஜீவா அவர்களுக்கு நினைவு ஸ்டாம்ப் வெளியிடுவதற்கு இந்த அரசு முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அரசு அதைக் கவனத்தில் கொள்ளும்.

1979 பிப்ரவரி 20]

திரு. க. மருதாசலம் : மறைந்த தேசியத் தலைவர்களுக்கு அரசு சார்பில் விழா எடுக்கப்படுகிறது. பசும்பொன் முத்து ராமலிங்கத் தேவர் அவர்களின் பிறந்த நாள் விழா எடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஏற்கெனவே பிறந்த நாள் விழா எடுக்கப்பட்டு வருகிறது. அதிலே பேசுகின்ற பேறு பெற்றவன் நான்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பெரியார் நூற்றாண்டு விழா தபால் தலையை சமீபத்தில் வெளியிட்டார்கள். இப்போது எந்த போஸ்ட் ஆபீசில் அந்தத் தபால் தலை கேட்டாலும் கிடைப்ப தில்லை. ஆனால் பல்வேறு வட மாநிலங்களின் தலைவர்கள் தபால் தலை கிடைத்துக் கொண்டே இருக்கிறது. மத்திய அரசுக்கு எழுதி பெரியார் நூற்றாண்டு விழா தபால் தலையைக் கொஞ்சம் அதிகமாக வெளியிட மத்திய அரசுக்கு எழுதப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தந்தை பெரியார் அவர்களுடைய படம் வெளியிடப்பட்ட தபால் தலை தபால் அலுவலகங்களில் கிடைக்கவில்லை என்றால் அது தந்தை பெரியார் அவர்களுடைய செல்வாக்கைக் காட்டுகிறதே தவிர வேறு அல்ல. அதிகமாக அந்த ஸ்டாம்புகளை வெளியிட வேண்டுமென்று நிச்சயமாக நாம் கேட்போம்.

லாஸ்கோ ஸ்டீல் பாக்டரி, அரூர்

* வினா எண். 120 இ— திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) அரூர் வட்டம் ஆர். தொட்டம்பட்டி லாஸ்கோ ஸ்டீல் பாக்டரியில் மின்சார டிரான்ஸ்பார்மர் பழுதடைந்ததின் காரணம் அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் ; (அ)&(ஆ) : இந் நிறுவனத்தின் தொழிற்சாலையில் நிறுவப்பட்டுள்ள 1200 கிலோ வாட் சக்தியுள்ள மின்சார டிரான்ஸ்பார்மர் 29—5—78 அன்று ஷார்ட் சர்க்யூட் ஆனதால் நடுவில் உள்ள பிரதான காயில் தீய்ந்துபோய் பழுதடைந்தது. அந்த டிரான்ஸ்பார்மர் திருவொற்றியூரிலுள்ள அதன் தயாரிப்பாளர்களான திருவாளர்கள் ஹாக்பிரிட்ஜ் ஹெவட்டிக் அண்ட் ஈசன் நிறுவனத்தினால் பழுது பார்க்கப்பட்டு, 4—9—78 முதல் மீண்டும் இயங்கி வருகிறது.